RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS

# ராஜம் கிருஷ்ணன் படைப்புகளில் பெண் சார்ந்த சமுதாயப் பார்வை

மு. கலைச் செல்வி [அ, *]

[அ] தமிழ்த்துறை, தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி-627951, இந்தியா

# Feminine Social Perspective in Rajam Krishans Works

M. Kalai Selvi [a, *]

[a] Department of Tamil, St. Xaviers College, Palayam Kottai, Tirunelveli-627951, India

* Corresponding Author:
kalai8825578988@gmail.com

Received: 28-11-2025
Revised: 17-02-2026
Accepted: 09-03-2026
Published: 17-03-2026

**ABSTRACT**
Rajam Krishnan stands as a pioneering writer in twentieth-century Tamil literature for introducing fieldwork-based research methods into her novels. She rejected the traditional view of women as merely domestic figures and portrayed them instead as laborers and as powerful agents of social change. Against this backdrop, the present study examines the ideas reflected in her novels and their close relationship with contemporary social issues. Rajam Krishnan's novels strongly critique social problems such as poverty, dowry-related oppression, and the regressive belief that only a male heir can carry forward a family lineage. In particular, she powerfully exposes the inhumane practice of killing female infants by administering poisonous milk, a consequence of viewing the birth of a girl child as an economic burden. Her works vividly portray the social reality in which parents themselves become perpetrators due to deep-rooted patriarchal and economic anxieties. The publication of these novels played a significant role in raising social awareness against female infanticide in Tamil Nadu. Moreover, Rajam Krishnan's writings contributed morally and ideologically to the emergence of government initiatives such as the "Cradle Baby Scheme," aimed at protecting unwanted girl children. Preventing the destruction of girl children—who should bloom like flowers upon the earth—forms the central objective and moral climax of her creative works.

**Keywords:** Rajam Krishnan, Feminine Social Perspective, Female Infanticide, Dowry System, Women's Economic Independence

## முன்னுரை

தமிழ் இலக்கிய உலகின் தலை சிறந்த பெண் எழுத்தாளர்கள் பட்டியலில் முதன்மையான இடத்தைப் பெற தகுதியுடையவர் ராஜம் கிருஷ்ணன் அவர்கள். சமுதாயத்தின் சரிநிகர் அங்கமாய் இருக்கும் பெண்கள் அன்றை சமூகப் பொருளாதாரக் காலச்சாரச் சூழலில் சிக்கித் தவிக்கும் நிலையையும் அந்நிலையை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதையும் நேரில் கண்டு ஆய்வு செய்து படைத்த பெருமைக்குரியவர். பெண்களுக்கான கல்வி, பொருளாதாரச் சுதந்திரம். வேலைப்பளு, வரதட்சணை, பெண் சிசுக்கொலை, சுய கௌரவம், தனித்தன்மை என்று பல கோணங்களில் சிந்தித்து உரத்த குரல் எழுப்பியர் இவரே.

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று" கு.எண்.236-திருக்குறள்

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு இணங்க தம் வாழ்வை புகழுக்குரியதாக்கி வாழ்ந்தவர் ராஜம் கிருஷ்ணன் அவர்கள். பெண்கள் தங்களுக்குள் இருக்கும் தாழ்வு மனப்பான்மையைப் போக்கவும், அவர்களுடைய பிரச்சனைகளை அவர்களே சரி செய்து கொண்டு சிந்தித்து செயல்பட வைப்பதே இவரது படைப்பின் தனித்தும் இதை வெளிப்படுத்தும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

## பெண் சிசுக்கொலை

மதுரை மாவட்டத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் பெண் சிசுக்கள் மண்ணில் கண் விழிக்கும் முன்பே தாய்மாராலேயே அழிக்கப்படுகிறது. என்ற துன்பச் செய்தியை கேட்டு அங்கு சென்று ஆராய்ந்து தனது மண்ணகத்துப் பூந்துளிர்கள்" என்ற படைப்பில் பதிவிட்டுள்ளார். அங்கு அவர்களுடன் தங்கி தீர விசாரித்து இப்பெண்சிசுக்கள் மருத்துவமனையிலோ அல்லது வீட்டிலோ எங்கு பிறந்தாலும் முடிவு ஒன்றாகத் தான் இருக்கிறது. என்பதை உணர்ந்து இதற்கு முக்கிய காரணம் வரதட்ணை போல என உறுதியுடன் கூறுகிறார்.

இந்தப் புதினத்தில் அழகாயி என்ற பெண் தனக்கு ஏற்கனவே 3-பெண் குழந்தைகள் இருந்தும் நான்காவது பெண் குழந்தை பிறந்துள்ளது. "அன்று அந்தச் சிசுவை, பாட்டி அகன்றதும் சுவாசத்தில் இரண்டு நெல் மணிகளைப் போட்டு முடித்துவிட்டாள். விடிந்து கேள்விப்பட்டு வந்து புருஷன் செத்த பிண்டத்தை அந்தக் கொல்லையில் தான் புதைத்தான்".

இவ்வாறு தாயே தனக்கு பெண் குழந்தை என்று தெரிந்ததும் அழிக்கும் செய்தி நமது நெஞ்சை நிலை குலையச் செய்கிறது. ஒரு பெண் குழந்தையை வளர்த்து படிக்க வைத்து சீதனம், வரட்சணையெல்லாம் கொடுத்து திருமணம் செய்வதற்குள் தாய், தந்தையர் படும் பாடு என்பது சொல்லற்கரிய கொடுமை என்பதுதான் உண்மை இச்சமூத்தில் தான் பெண் குழந்தை வளர வேண்டுமென்றால் வரதட்சணையே பெரும் தடையாக உள்ளது. அதுமட்டுமல்ல ஆண் குழந்தை பெற்றால்தான் சமூகம் அவளை மதிக்கிறது. பெண் குழந்தை பெற்றால் தூற்றுகிறது என்பதை தன் படைப்பில் பதிவிட்டுள்ளார்.

அழகாயி தன் மகள் "பூவுக்கு" முதலில் பெண் குழந்தை பிறக்கிறது. அதைப் பார்த்து பரிதாபமாகவும், அதைத் திட்டி தன் மகளிடமே இக்குழந்தை வேண்டாம் எனக் கெஞ்சுகிறார்.

"ஏண்டி இதென்னத்துக்கு, கெட்டியவம் போயிட்டா, அப்பெ சரியில்ல, இது எதுக்கு வச்சிருக்கனும் பொட்டப்புள்ளிய வச்சிட்டு என்னை சொகமிருக்கு" என்று பேசுகிறாள். அழகாயின் புலம்பலுக்குக் காரணம் வரதட்சணையே சாதாரண ஒரு விவசாயிக்கு கட்டிக்குடுக்கனும் மின்னாக் கூட 20 பவுன் கேக்கும் சூழல்தான் ஆனாலும் அழகாயி மனம் மாறி குழந்தையின் முகத்தைப் பார்த்து ஏதோ மனதில் புத்துணர்ச்சி பெறும் தன்மை அடைந்து அக்குழந்தையைக் கொல்லாமல். "செவ்வெண்ணெய் ஊற்றவில்லை. தாயின் அமுத கலசங்களில் ஊறிய சீம்பால் குடிக்கிறது" என எழுதியிருப்பது தாயே கொலை செய்த நிலையிலிருந்து தாயின் மனதை மாற்றி சுமைக்கும் ஒரு புதிய கோணத்தில் முடிவு உள்ளது. இவரது படைப்பின் தனித்துவமாகத் தெரிகிறது.

## வரதட்சனை முறையை மாற்றும் காதல்

வரதட்சணை என்பது பெண்ணைப் பண்டமாக்கும் ஒரு சமூகக் கேடு என்பதும், திருமணச்சந்தைப் பொருளாக - பெண்ணைப் பாரக்கும் முறையையும் வன்மையாகக் கண்டித்தார் வரதட்சணை கொடுக்க முடியாமல் தற்கெலை செய்து கொள்ளும் பெண்களைவிட அந்த முறையை எதிர்த்து நிற்கக் கூடிய சுயசிந்தனை உடைய உழைத்து வாழும் பெண்வார்க்கத்தினரையே தனது கதாபாத்திரங்களாகப் படைத்துள்ளார். "களம்" என்ற சிறுகதையில் "இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பி ஆனந்தியின் அறிவிலக்கக் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட அவனும், அவனுடைய பெருந்தன்மையான கபடமற்ற அன்பில் கட்டுண்டு அவளும் மணந்து ஓராண்டு ஆகவில்லை சாதி வேறுபாட்டால் ஆனந்திக்குப் பெற்றோர் துண்டிப்பு ஏற்பட்டது. இருபது, முப்பது, நாற்பது சவரன் கேட்டு வரும் இடங்களை நிராகரித்தாள்".

இன்று பலரும் "பெண் விடுதலை" என்பது ஆணை எதிர்பது என்று நினைக்கிறார்கள். ஆனால் உண்மையாகவே ஒருவரை மற்றவர் அறிவு சார்ந்த மனிதர் என்ற மதிக்கும் மனப்பான்மை என்பதை புரிந்து கொள்வதில்லை.

## வரதட்சணை என்னும் சமூக விரோதி

அன்றிலிருந்து இன்று வரை பெண் சமூகத்தின் பூரண, நிரந்தர எதிரியாக இருப்பது வரதட்சணையே இதைத்தான் ஒரு பெண் குழந்தை என்பது தன் தாய்க்கே சுமையாகத் தெரிகிறது என்ற நிலையின் வழியாக பறைசாற்றுகிறார். ஒரு பெண் பூப்படைந்தவுடன் இவன் குலைப்பானோ அவன் குலைப்பானோ என்று பயந்து ருதுவாகி 3 வருசம் ஆனதும் இன்னும் கட்டிக்கொடுக்கலையா? என்ற சுற்றத்தாரின் வசை ஒருபுறம் பொம்பளபுள்ளைய ஏன் படிக்க வைக்கிற என்ற நிலை, "முப்பத்தஞ்சு பவனேனும் இல்லாம படி ஏறாதீங்க" என்ற பின்னணிகளெல்லாம் பார்க்கும் போது இச்சமூகத்தின் பெண் வளர வேண்டுமென்றால் அவர்கள் சந்திக்கும் பிரச்சனை கடலளவு உள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஒரு பெண்ணை நன்றாகப் படிக்க வைத்து தன் சுயசம்பாத்தியத்தில் அரமச் செய்தாலும் கூட அவளுக்கான அங்கீகாரத்தை இச்சமூகம் அவளுக்குத் தருவதேயில்லை என்பது நிதர்சனமான உண்மை.

"நீங்க பத்து பவுனம் பண்ட பாத்திரமும் குடுத்தாத்தே எங்க ஆளுகளுக்கு முன்ன கவுரவமா இருக்கும் அவனுக்கு முப்பது பவுன் போட்டுக்கட்டு ஆளுவாரங்க உங்க பொண்ண புடிச்சிருக்கு அதனால்தான்"

இவ்வாறெல்லாம் சமூகக் கட்டமைப்பு இருப்பாதாலேயே பிறந்து உடனே கொலை செய்யப்படுகிறார்கள் என்பதே உண்மை. பூவு தன் கணவனுடன் வாழ அழகாயியும் வெள்ளைச்சாமியுமும் தன்னால் முடிந்த எல்லா செயல்களையும் செய்து முடித்து விடுகிறார்கள். ஆனால் மாப்பிள்ளையோ குடி, அடிதடி என பல முறையற்ற செயல்களில் ஈடுபட்டு சேரக்கூடாத இடத்தில் சேர்ந்து இறந்து விடுகிறான். இவனுடைய அடிதடி தொழிலாலேயே கொலை செய்யபடுகிறான். தற்போது பூவு நிறைமாத கர்பணியாக இருக்கிறாள். வாழ்வின் நிற்கதியான நிலையில் நிற்கும் போது கூட இந்நிலைக்கு அவளே காரணம் என ஒரு பெண்ணே பேசுவது கொஞசம் கொடுமையாகவே உள்ளது. அவர் கணவனின் தாய் அழுது புலம்பும் போது.

"அவன் கஞ்சாக் குடித்து அடிதடியில் ஈடுபட்டுத் தான் இறந்தான் என்பதை விடுத்து இவளதா கட்டுவேன்னு சொன்னியே பெத்த வயிறு எரியுதே? கொன்னுப்பிட்டாளே பாவி என் வயிறு எரியறாப்ல இவ எரிஞ்சு சாவனும்" என அவள் மாமியார் ஓலமிடுவது பெண்கள் தங்கள் வாழ்வின் ஒவ்வொரு படிநிலைகளிலும் எவ்வாறெல்லாம் நிந்திக்கப்படுகிறார்கள் என்பதைக் காணமுடிகிறது.

## சாதிப்பாடுபாடு

40ஆண்டுக்கு முன் இருந்த சாதிப்பாகுபாட்டைப் பிரதிபலிக்கும் முறையே சற்று வேறு கோணத்தில் பதிவு செய்துள்ளார். சாதிய வேறுபாடு பெண்களிடமும் மிகுதியாக இருந்துள்ளதை, "ஏண்டி உனக்கு என்ன வந்துட்டது? சாதியில்லாத சாதி? ஒண்ணுமில்லேன்னு கட்டின துணியோட வந்து நிக்கிற எம்புள்ளிக்கி அம்பது சவரனோட பொண்ணு பார்த்து வச்சிருந்தேனே" என்று சந்திரனின் பெரியம்மா கூறுவது. ஆனந்தி சந்திரன் காதல் திருமணத்தை ஒப்பாத நிலையை எடுத்துரைப்பதோடு ஆண்களின் சாதிய நிலையிலிருந்து முற்றிலும் மாறியதன்மையில் பெண்கள் மனதில் உள்ள சாதியப்பாகுபாட்டைப் பார்க்க முடிகிறது.

"வேலி" என்ற சிறுகதையில் ஒரு பெண் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்பதெல்லாம் அவள் வேலைக்குப் போய் பணம் கொடுத்த மாறிவிடும் என்பதை பதிவு செய்துள்ளார் வரதட்சணையை ஒழிக்கும் முக்கியமான ஆயுதமாகப் பயன்படுவது பெண்கல்வி, வேலை செய்தல் போன்றவையாகும். இந்நிலை சரியாக நடைபெற்றால் வரசட்சணை என்ற அடிமைத்தனத்திலிருந்து எளிதாக விடுபட முடியும் என்ற நம்பிக்கை விதைக்கும் கதாபத்திரஸ்களை படைத்துப் புதிய வளர்ச்சிப்பாதையை உருவாக்கியுள்ளார்? "கஷ்டந்தாஸ்கம்மா, குலமில்லே, சாதியில்லேன்னு சொல்லிடறாங்க எளிசா என்னதான் ஆனாலும் அவங்க தொட்டு நீங்க எடுத்துக்கிட முடியுமாம்மா? அதெப்படி முடியும்? எனக்கு எங்கே மனது துணிகிறது? நிசமாச் சொல்றேன்" என்று குரலைத் தாழ்த்திக் கொண்டாள் மாலதியின் கணவனைப் பெற்றவள்".

தன் வீட்டை எதிர்த்து நம்பியவனைக் கரம் பிடித்த மாலதி தன் காதல் வாழ்வின் நிலையைக் கடந்து வரும் நிலையில் தன் வேலையே அவளை தற்காத்து அவ்வீட்டில் வாழ வைக்கிறது என்பதையும் அவளுக்கான சுயமரியாதை இல்லாவிட்டாலும் குடும்பத்தில் ஒருத்தி என்று உலகுக்கு முன்னே ஏற்றுக்கொண்டு வாழவழி செய்தது.

மாலதி வீட்டிலிருந்து அவள் அக்கா அத்தான் வந்தும் கூட 200 ரூபாய், வளையல் எப்டிச் செய்யனுமோ நீங்களே செய்யுங்க என கொடுத்ததும் உடனே வாங்கிக் கொண்டு செய்துக்கிடுவதானால் பணம் கொடுக்கிறோம்.

"ஏதோ சவரன் எண்பதுன்னு விக்கிறது

பார்க்கலாம் காப்பியைப் குடியேன்"

முதலில் அவளது அக்காவையும் அத்தானையும் பார்க்கும் போது "ஒரு வெறுப்பை விழுங்கிவிட்டு சிரிப்பை நெளியவிட்டு வாங்க" என்றவள் காசு கொடுத்ததும் காபி கொடுத்து உபசரிக்கிறாள்.

மாலதின் மாமியார் அவளை ஏற்கமனமில்லாமல் ஆனால் அவள் பணம் சமபாதிப்பதனால் அவளை ஏற்றுக்கொள்வது போல் நடித்து பொய்யான அன்பைக் கொடுப்பது போல பேசுவது" வேலி தாண்ட முடியலே முள்ளிலதான் சிக்கிடாப் போல இருக்குது" என்று வருத்தம்முறப் பேசியவள்.

“சரி எந்திரிக்காதே, சீரக ரசமும் சோறும் கலக்கிக் கொடுத்தனுப்புறேன். குடிச்சிட்டுப் படுத்துக்க... அஞ்சு தேதியாச்சே ஆபீஸ்ல இன்னும் சம்பளப் பட்டியல் போடலியா?” என்று கேட்கும் போது பணத்தை வைத்தே சாதியும் மாறும் தன்மையுடையது என்பதைப் புலப்படுத்தியுள்ளார்.

“பெட்டியிலே வச்சிருக்கேனே”

“பரவாயில்லை திறந்து தானே இருக்கு”

“ஆமாம் சேலைக்கடியில் உள்ள பார்சை

எடுத்துக் கொண்டாள்”

பொருளாதாரச் சுதந்திரம் என்ற நிலையில்

பார்க்கும் போது இந்தப் பணம் அவளுக்கோ

அவள் அம்மாவுக்கோ பயன்தரவில்லை ஆனால் இந்த

வீட்டில் அவள் ஒரளவு மனநிம்மதியுடன் வாழ

கல்வியும் அவள் செய்யும் பணியும் தருகிறது.

வேலியுமில்லை முள்ளுமில்லை

பணத்துக்கு முன் சாதி, மதம், இனம், மொழி என

ஒன்றுமே இல்லை என்பதைக் குறிப்பிடுகிறது.

சினிமாவில் பெண்கள் நிலை

இன்றைய சூழலில் சினிமா மோகம் பெண்களை எந்த அளவுக்குப் மோசமான நிலையில் சித்தரிக்கிறது என்பது “வெள்ளித்திரை” என்ற சிறுகதையில் பதிவு செய்துள்ளார்.

“ஒரு காட்சி கதாநாயகி குளியலறையில் சேலை வைத்துக்கொள்ளாமல் குளிக்கிறாளாம் கதாநாயகன் அதை எடுத்துக்கொடுப்பதாக ஒரு சரசம்”.

ரங்கம் என்ற பெண் இதைக்காண பிடிக்காமல் குமட்டுவது போல் வெறுப்பாக இருக்கிறது என்கிறார். ஆனால் பல இளவட்டங்கள் இதை ரசிக்கின்றனர். இதுபோன்ற நிகழ்வுகள் பெண்ணை ஒரு இயல்பான நடையில் இருக்க விடாமல் சினிமா என்னும் மோகத்தால், நடிப்புதான் என்றாலும் கூட ஒரு நியாயம் இல்லாமல் இருப்பதை கவனிக்க முடிகிறது. பெண் என்பவள் நாட்டின் கண் போன்றவள் என்ற நிலையிலிருந்து மாறி ஒரு பார்வைப் பொருளாகவும் தான் செய்வது சரியற்ற ஒரு தொழில் என்பதையும் மறக்க வைக்கிறது. வெள்ளித்திரை என்பதை அழகாக உண்மைபட ஒரு பெண் எழுத்தாளரே பேசியிருப்பது ஏற்கத்தக்க வகையில் உள்ளது.

ஒரு ஆணுடன் சினிமாவுக்குச் செல்வது தவறு இல்லை என வாதிடும் இளம் தலைமுறைப் பெண் ஒருத்தி தன் தாயிடம்,

“என்னம்மா தப்பு வந்திட்டது இப்ப? என்னம்மா

இப்படியெல்லாம் பேசுறே?” என்ற கேள்விக்கனைகளைக் கேட்கும் மகளிடம் வாழ்வின் யதார்த்தமான வாழ்க்கை முறையை எடுத்துரைக்கிறாள் தாய் ரங்கம்.

“திரையில் ஓடறது வெறும் நிழல் அதைப் பார்க்கிறது வெறும் பொழுது போக்கு, அதில் பிரச்சனை இல்லை...

துன்பம் இல்லை. இது அப்படியில்லேம்மா”....

என்பதிலிருந்து சினிமா வேறு வாழ்க்கை வேறு என்ற வேறுபட்ட மனநிலை என்பது இன்றைய இளந்தலை முறைக்கும் புரிந்து கொண்டு பயன்படும் கருத்தாக உள்ளது. அடிமை என்பது ஒரு மனிதனுக்கு என்பதிலிருந்து அடுத்த கட்ட பரிணாம வளர்ச்சியாக சினிமா, கைபேசி என மாறியுள்ளது.

## மதுவால் சிரழியும் குடும்பம்

வரதட்சணை ஒரு புறமிருக்க குடியின் கொடுமையால் சீரழிவதும் பெண்கள் வாழ்வே அழகாயி தன் மகள் “பூவு“ வைக் கட்டிக்கொடுத்தவன் குடிகாரன் என்பதை அறிந்து இடிவிழுந்தது போல் உணர்கிறாள். அது மட்டுமின்றி சம்பந்தக்காரியும் தன் மகனையே பெருமையாகப் பேசி பூவுவைக் காரணமில்லாமல் குறை கூறிவிடுகிறாள்.

"பொறுக்க முடியவில்லை அழகாயிக்கு நீ சம்பந்தக் காரியாச்சேன்னு பொறுத்திட்டு நிக்கற உம்பய்யனா சாது? இந்தப் புள்ளயப் போட்டு அடிச்சி, அம்புட்டு நகையையும் வாங்கிட்டுப் போயி குடிக்கிறா, சூதாடுறா".

இது போன்ற செயல்களால் தங்கள் வாழ்வை இழந்து, ஒரு நிற்கதியான நிலைக்கு பெண்கள் தள்ளப்படுகிறார்கள் என்பதே உண்மை. இவரது படைப்பின் உச்சம் அவன் தன் மகளை அடிக்கும் போது "நில்லுடே அங்கியே புள்ளையப் போட்டு அடிச்சி சாமான் உருவிட்டுப் போயிட்டுக் குடிச்சிட்டு வார எம்புள்ளைய சாவுறததுக்கு குடுக்கல?" என்று அழகாயி தட்டிக் கேட்பது சமூகத்தின் மொத்த பெண் குரலாக உருவெடுத்திருக்கிறது என்பதே உண்மை நடப்பது நடக்கட்டும் என அழுது கொண்டு இருக்காமல் எதிர்க்கும் தொனி சற்று தன்னம்பிக்கையின் உச்சமாகத் தெரிகிறது. எந்தவொரு பாத்திரத்தின் படைப்பு படிப்போருக்கு ஊக்கம் தரும் வகையில் உள்ளது.

## தனித்துவம்

ராஜம் கிருஷ்ணன் தனது படைபிப்ன பெண் கதாபத்திரங்களை வெறும் பாதிப்புக்கு உட்பட்டவர்களாகக் காட்டாமல் பாதிப்பின் சூழலைத் துணிந்து எதிர்க்கும் பேராற்றலின் அம்சமாகவே சித்தரித்துள்ளார். தனது படைப்புகளின் அடிநாதமாக முழங்குவது பெண் பொருளாதாரரீதியாகத் தன்னிறைவு அடைய வேண்டும் என்பதேயாகும்.

மரபு வழிப்பட்ட குடும்பங்களில் பெண்கள் தங்களுக்கு விருப்பமான வாழ்க்கை முறையை தேர்ந்தெடுக்க முடியாமல் தவிப்பதும் அதிலிருந்து எவ்வாறு விடுபட வேண்டும் என்ற வழிகாட்டும் படைப்பு முறையே கையாண்டுள்ளார். மேலும் வாழ்நாள் முழுக்க பெண்கள் குடும்பத்தலைவிக்காக மட்டும் இருக்காமல் சிறந்த சிந்தனையாளர்களாகவும், சூழ்நிலை எதிர்கொள்ளும் ஆதிக்க சக்தியாகவும் இருக்க வேண்டும் என்ற உன்னத உயர்ந்த கொள்கைத் தன்மையுடன் எழுதியுள்ளார்.

இவரது எழுத்து நடை என்பது மற்ற எழுத்தாளர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்ட தன்மை உடையது. ஏதோ கேட்ட நிகழ்வோ, புனைவோ, என்றில்லாமல் இவர் சந்தித்த சமூக பிரச்சனைகளை யதார்த்தமான நடையில் படைத்திருப்பது இவரது படைப்பை உயர்ந்த நிலைக்கு மாற்றியுள்ளது.

பெண் இனத்தை அழிக்க முயலும் எந்த ஒரு கூற்றும் சமுதாயத்தை விலங்குச் சமுதாயமாக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. பெண்களுக்கான மதிப்பை வழங்கும்போது தான் சமுதாயம் மாண்புபெறும் அப்போதுதான் சமூகத்தின் பெரும் தீமையாக உருவெடுத்திருக்கும் வரதட்சணை அல்லது சீதனப்பிரச்சனை, வேரோடு அகற்ற முடியும் ஒரு பெண் உரிமை, உழைப்பு, உற்பத்தி என எல்லாவற்றிலும் சமமாகப்பங்கு பெறும் போது தான் குடும்பம் என்ற அமைப்பு சிதையாமல் பாதுகாக்கப்படும் என்பதாகும்.

## முடிவுரை

ஒரு படைப்பு வாசகனின் மனக்குமறல்களை வெளிக்கொண்டு வரும் என்பதற்கிணங்க இவரது படைப்புகள் வாசிப்போரை தட்டி எழுப்பு ஆற்றல் கொண்டது. படைப்பின் மூலம் பெறும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று உறுதியாக நம்பியுள்ளார். சமுதாயத்தின் நச்சுக்கொடிகளான வரதட்சணை, சீதனம், மது, சூதாடுதல் போன்றவற்றை இனம் காட்டவே தன் எழுத்து ஆற்றலைப் பயன்படுத்தி உள்ளார். என்பதுகளில் எழுதிய படைப்பாக இருந்தாலும் இன்று வரை இத்தகைய சமூகப் பாதிப்பு பெண்களுக்கு நடத்தேறிக் கொண்டுதான் இருக்கிறது. உதாரணமாக திருப்பூரில் "ரிதன்யா" என்ற பெண்ணின் தற்கொலை 500 பவுன் நகை கேட்டு தொல்லை கொடுத்த நிலையில் படித்த பெண்தான் தன் முடிவை தவறாக எடுக்கும் சூழலை சமூகம் பெண்களுக்குக் கொடுக்கிறது.

சம உரிமை என்பது பேச்சளவில் மட்டுமே இன்றும் இருக்கிறது. கருத்து, எண்ணம், செயல் என எல்லா நிலைகளிலும் சமமாக மதிக்கப்படுதே நல்லதொரு மனித சமுதாயத்தை தோற்றுவிக்க முடியும் சமூகம என்னும் பயிர் வளர எல்லா நிலைகளிலும் உதவியாக இருப்பவள் பெண் என்பதால் பெண்ணுக்கான மரியாதை, பாதுகாப்பு, உரிமை என எல்லாமும் கொடுப்பதே நாடு வளம் பெற உதவும். என்பதே படைப்பாளியின் விருப்பமாகும்.

## References

பா சிவக்குமார், ஆண்களும் பெண்ணியமும்

ந முத்து மோகன், பிணைப்புகளும் பிரிவுகளும்

ராஜம் கிருஷ்ணன், மண்ணகத்து பூந்துள்ளிர்கள்

ராஜம் கிருஷ்ணன், களம் சிறுகதைத் தொகுதி

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License